IN THE COURT OF III ADDITIONAL DISTRICT COURT,
TIRUVALLUR AT POONAMALLEE

**O.S.19/2013**

Deposition of witness for the Plaintiff/PW1

Name: M.Jayakumar Date: 14.10.2022

Father's/Husband's Name: Munusamy

**குறுக்கு விசாசணை**

எனது வீட்டு விலாசம் பழைய எண்.206, புதிய எண்.5/147, டி.ஆர்.ஆர் நகர், சென்னீர்குப்பம், சென்னை -56. என்னுடைய சொத்தின் பரப்பளவு 7 சென்ட். அதன் பழைய சர்வே எண்.51/2, புதிய சர்வே எண்.109/24. எனது சொத்தின் வடக்கே கற்பகம் வீடும், சா லையும், தெற்கே அம்மன் கோயில், கிழக்கே காலி மனை, மேற்கே எனது மனைவியின் பெயரில் உள்ள 5சென்ட் சொத்து, உள்ளது. 1979லிருந்து 7 சென்ட் இடத்தில் நான் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். எனது பெற்றோர்கள் அந்த சொத்தில் இருந்தார்களா என்றால் இல்லை. நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் 1963ல் பிறந்தேன். பி.த.சா.6 ல் எனது பிறந்த தேதி 05/05/1965 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1979லிருந்து 2010 வரை நான் அந்த சொத்தில் குடியிருந்து வந்ததற்கான எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.த.சா.6ன் படி எனது வயது 1979ல் 14 என்றும் ஆதலால் நான் அந்த சொத்தில் 1979ல் குடியிருந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக குடியிருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.தசா.5ல் உள்ள மின் கட்டண ரசீதுகள் 2013 ஆம் வருடத்துக்கும் அதற்கு பிறகும் உள்ளது என்றால் சரிதான். பி.த.சா.5ல் முகவரி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வேறு சொத்துக்குரிய ஆவணங்களை நான் இந்த வழக்கில் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.த.சா.4 வீட்டு வரி ரசீதுகள் 2012 மற்றும் 2016 வருட தேதியிட்டது. பழைய வீட்டு வரி ரசீதுகள் என்னிடம் உள்ளது. இருந்திருந்தால் நான் அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும். இவ்வழக்கிற்காக நான் அவை இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.த.சா.2 பட்டா மட்டும் தான் எனது சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்பதை காண்பிக்கும்

ஆவணம் என்றால் சரியல்ல. பட்டாவை தவிர அதை காட்டும் வேறு ஆவணங்களும் உள்ளது. வேறு ஆவணங்கள் இருந்திருந்தால் நான் அவற்றை தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு தாக்கல் செய்யாததினால் நான் அவை இருப்பதாக சொல்லியிருப்பது பொய்யானது என்றும் சொன்னால் சரியல்ல. பி.த.சா.2ல் தாசில்தார் 2010ஆம் வருடத்தில் வழங்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். பட்டா நகல் என்று பி.த.சா.2ல் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.த.சா.2ல் கிராம நிர்வாக அலுவலரின் கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். எனது மனைவியின் சொத்தின் விஸ்தீரணம் 5 சென்ட். அது எனது 7சென்ட் சொத்திற்கு மேற்கே உள்ளது. நான் எனது மனைவிக்கு 2015ல் அந்த சொத்தை தான செட்டில்மென்ட் பத்திரம் பதிவு செய்து கொடுத்தேன். பட்டாவில் கண்டுள்ள சொத்தை தான் எனது மனைவிக்கு செட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுத்தேனா என்றால் ஆம். பத்திரம் எழுதி கொடுப்பதற்கு முன்பாக எனது மனைவி பெயரில் சொத்து இல்லை. எனது பதிலுரையில் எனது சொத்திற்கு மேற்கே எனது மனைவியின் சொத்து உள்ளதாக சொல்லியுள்ளேன். எனது ெ சாத்துக்கு கிழக்கு பக்கத்தில் காலி மனைகள் உள்ளது. அது அஷ்ட லட்சமி நகர் லேஅவுட்டா என்றால் இல்லை. வாதுரையில் உள்ள அட்டவணையில் குறிப்பிட்ட சர்வே எண் என்னவென்று எனக்கு தெரியாது. என்னுடைய சொத்து உள்ள சர்வே எண்ணிற்கும், சர்வே எண்கள் 51/4 மற்றும் 51/16க்கும் சம்பந்தம் உள்ளதா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எனது பதிலுரையில் வாதியின் பெயரில் உள்ள பட்டா போலியானது என்று சொல்லியுள்ளது பற்றி எனக்கு தெரியாது.

( கற்றிறந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது )